# தமிழக ஆயர் பேரவையின் பணிக்குழுக்களின் செயலர்கள் கூட்டம்

நாள்: 26.11.2019 இடம்: தமிழ்நாடு பொதுநிலையினர் உருவாக்க மையம், திருச்சி

தமிழக ஆயர் பேரவையின் பணிக்குழுக்களின் செயலர்களுக்கான கூட்டம் 2019, நவ. 19 அன்று திருச்சி, பிராட்டியூர், தமிழ்நாடு பொதுநிலையினர் உருவாக்க மையத்தில் நடைபெற்றது. தமிழக ஆயர் பேரவையின் தலைவர், மேதகு பேராயர் முனைவர் அந்தோனி பாப்புசாமி அவர்கள் தலைமையேற்க, தமிழக ஆயர் பேரவையின் இளைஞர் பணிக்குழுத் தலைவர், மேதகு ஆயர் முனைவர் நசரேன் சூசை அவர்கள் முன்னிலை வகிக்க கூட்டமானது தொடங்கியது. காலை 10.30 மணிக்கு குடும்ப நலவாழ்வுப் பணிக்குழுச் செயலர், அருள்சகோ. கிளமென்சியா அவர்கள் இறைவுணர்வுப்பாடலைப் பாட, பொதுநிலையினர் பணிக்குழுச் செயலர், அருள்பணி. லூர்துசாமி அவர்கள் இறைவேண்டல் செய்தார். தமிழக ஆயர் பேரவையின் துணைச் செயலர், அருள்பணி. சகாயராஜ் அவர்கள் ஆயர்களையும் பணிக்குழுக்களின் செயலர்களையும் இன்முகத்தோடு வரவேற்றார்.

கூட்டத்திற்கான நோக்க உரையினை பேராயர் அந்தோனி பாப்புசாமி அவர்கள் வழங்கினார். பல ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் பணிக்குழுக்களின் செயலர்கள் கூட்டமானது நடைபெறுவதனை சுட்டிக்காட்டியதோடு, இளைஞர் ஆண்டினை இணைந்து, பொருளுள்ள முறையில் கொண்டாடுவதற்காகக் கூடியுள்ளதனை எடுத்துரைத்தார். இளைஞர்கள் தமிழகத் திருஅவையின் சொத்து. அவர்களைச் சரியான முறையில் கையாள வேண்டும். அப்போதுதான் இளைஞர்கள் திருஅவையிலும் சமூகத்திலும் ஈடுபாட்டோடு உழைக்க முன்வருவார்கள். இதற்காகத்தான் தமிழக ஆயர்கள் 2020ஆம் ஆண்டினை இளைஞர் ஆண்டாகக் கொண்டாட அழைப்பு விடுத்துள்ளோம் என்பதனை நினைவுபடுத்தினார்.

கூட்டத்திற்கான போக்கினை ஆயர் நசரேன் சூசை அவர்கள் எடுத்துரைத்தார். இளைஞர் ஆண்டினை அறிவித்துள்ள தமிழக ஆயர்களுக்கு பணிக்குழுவின் தலைவர் என்ற முறையில் நன்றியை வெளிப்படுத்தியதோடு, இளைஞர் பணிக்குழுவோடு தமிழகத்தின் பிற பணிக்குழுக்களும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான களத்தினை உருவாக்கியுள்ள ஆயர் பேரவையின் தலைவர் அவர்களுக்குச் சிறப்பான நன்றிகளைத் தெரிவித்தார். இன்றைய இளைஞர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை முன்னிறுத்தி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள திருத்தூது ஊக்கவுரையான ‘கிறிஸ்து வாழ்கிறார்’இன் அடிப்படையில் பதிலிறுப்புகளை மூன்று தளங்களில் இனம் கண்டு, செயல்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் இளைஞர் ஆண்டினை சிறப்பாகக் கொணடாடலாம் என்பதனை வலியுறுத்தினார். 1. அருள்வாழ்வு: இளைஞர்

இயேசுவை சந்திப்பதில் வேரூன்றிய அருள்வாழ்வாக மலர வேண்டும். அவரை நண்பராகக் கண்டு கொள்ளவதற்கான வழிமுறைகளை உருவாக்க வேண்டும். 2. பயிற்சிகள்: ஆளுமை உருவாக்கப் பயிற்சி, சரியான கருத்தியல்களை இனம் காண்பதற்கான பயிற்சி, இலட்சியக் கொள்கைகளை வகுப்பதற்கான பயிற்சி, முதியோர்களுடன் நலமான உறவினை உருவாக்கி, வேர்களுடன் இணைந்திருப்பதற்கான பயிற்சி என பன்முகப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். 3. பங்கேற்பினையும் ஈடுபாட்டினையும் வெளிப்படுத்தும் பணிகள்: சுற்றுச்சூழல் பாதுகாப்புச் செயல்பாடுகள், பிற சமயத்தினரோடு நலமான உறவினை வளர்க்கும் செயல்பாடுகள், குடும்ப வாழ்வு பற்றிய பயிற்சிகள், பாலியல் பற்றிய நலமான புரிதலைப் பெறுவதற்கான பயிற்சிகள், இயற்கை உணவு பற்றிய விழிப்புணர்வுப் பயிற்சிகள், பாதிக்கப்பட்டோருக்கு உளநல உதவிகள், சுயதொழில் மேற்கொள்ள பயிற்சி, இளம்பெண்களுக்கான சிறப்பு கவனம், அன்பியங்கள், பங்கு அருள்பணிப்பேரவை ஆகியவற்றின் நிர்வாகத்தில் இளைஞர் பங்கேற்க வாய்ப்பு என தளங்களை உருவாக்குவதன் மூலம் இளைஞர் ஆண்டு சிறப்பான தாக்கத்தினை தமிழகத் திருஅவையில் உருவாக்கும் என்பதனை வலியுறுத்தினார்.

1. இளைஞர் பணிக்குழு

இளைஞர் ஆண்டு – 2020ஐக் கொண்டாடுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட இலக்கு, நோக்கங்களை அருள்பணி. மார்ட்டின் எடுத்துரைத்தார். இளைஞர் ஆண்டில் தமிழக அளவில் நடைபெற உள்ள நிகழ்வுகளை எடுத்துரைத்து, அனைத்து பணிக்குழுக்களின் செயலர்களும் அவைகளில் பங்கேற்க அழைப்பு விடுத்தார். குறிப்பாக, 2021 முதல் 2030 முடிய ஆண்டுகளுக்கான இளைஞர் பணித் திட்ட வரைவினை உருவாக்க மே திங்கள் இறுதி வாரத்தில் நடைபெற உள்ள ‘இளைஞர் மாமன்றத்தில்’ அனைத்து பணிக்குழுக்களின் செயலர்களும் பங்கேற்க அழைப்பு விடுத்தார். இளைஞர் ஆண்டின் சிறப்புச் செயல்பாடாக, 100 இளைஞர் திட்டத்தினை தமிழகத் துறவியர் பேரவையோடு இணைந்து செயல்பட உள்ளதனையும் விளக்கினார். அதே வேளையில், பிற பணிக்குழுக்கள் தங்களது அன்றாடச் செயல்பாடுகளில் இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். வாய்ப்பு இருப்பின் இளைஞர்களுக்கான சிறப்பு பயிற்சிகளை, நிகழ்வுகளை ஏற்பாடு செய்யலாம் என வேண்டுகோள் விடுத்தார்.

- இளைஞர் ஆண்டிற்கான திட்டத்தில் இறைநம்பிக்கை தொடர்பான செயல்பாடுகள் குறைவாக உள்ளதனை நற்செய்தி அறிவிப்பு பணிக்குழுவின் செயலர், அருள்பணி. ஜெகன் சுட்டிக்காட்டினார். மறைமாவட்ட அளவில் தியானங்கள், அருங்கொடை கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட உள்ளன. பங்குகளில் இளைஞர்களுக்கென்று சிறப்புத் திருப்பலி ஏற்பாடு செய்யப்பட உள்ளது. எனவே, தமிழக அளவில் தனியாக ஏற்பாடு செய்ய வேண்டிய தேவை இல்லை. அதே வேளையில், தொடக்க விழா, மாமன்றம், நிறைவு விழா, 100 இளைஞர் திட்டம் ஆகியன இளைஞர்களின் அருள்வாழ்வினை வளப்படுத்தும்

செயல்பாடுகளோடு இணைத்தே கொண்டாடப்பட உள்ளன என்பதனை அருள்பணி. மார்ட்டின் தெரிவித்தார்.

- அனைத்து செயல்பாடுகளும் பங்குத் தளங்களில் செய்யப்பட வேண்டியுள்ளதால், அருள்பணியாளர்கள், துறவிகள் ஆகியோருக்கு இவை குறித்த பயிற்சிகள் ஏற்பாடு செய்வது, நற்பணி மன்றங்களில் இயங்கக்கூடிய இளைஞர்கள், திருஅவையை விட்டு விலகியுள்ள இளைஞர்களை ஒருங்கிணைக்கத் திட்டம் ஆகியன குறித்து அருள்பணி. பிலோமின் கேள்விகளை எழுப்பினார். தமிழக அளவில் சன. 11 அன்று தமிழ்நாடு பாண்டிச்சேரி துறவியர் பேரவை தமிழகத்தில் உள்ள இளந்துறவிகளுக்கென்று சிறப்புப் பயிற்சியினை திண்டிவனத்தில் இளைஞர் பணிக்குழுவின் வழிநடத்துதலில் ஒருங்கிணைக்க உள்ளது. பல மறைமாவட்டங்களில் கிறிஸ்து வாழ்கிறார் அடிப்படையில் பயிற்சியானது ஏற்கனவே அருள்பணியாளர்களுக்காக நடத்தப்பட்டுள்ளன. அன்பியங்களில் இளைஞர் பொறுப்பாளர் ஒருவரை நியமிக்க உள்ளனர். அவர்கள் வழியாக அனைத்து இளைஞர்களையும் அணுகிச் சென்று, உரையாடல் வழி இளைஞர்களை ஒருங்கிணைக்க உள்ளோம் என அருள்பணி. மார்ட்டின் பதிலளித்தார்.

நற்செய்திப் பணிக்குழு

நற்செய்திப் பணியில் இளைஞர்கள் ஆர்வத்துடன் பங்கேற்க, இளைஞர்களுக்கென்று தனிப்பிரிவைத் தொடங்க உள்ளோம். இளைஞர்களிடையே ஆன்மீக எழுச்சியினை உருவாக்க அருங்கொடை கூட்டத்தினை ஏற்பாடு செய்ய உள்ளோம் என பணிக்குழுவின் செயலர், அருள்பணி. ராஜா ஜெகன் எடுத்துரைத்தார்.

முப்பணி நடுவம், திண்டிவனம்

நடுவத்தின் இயக்குனர் அருள்பணி. பிலோமின் அவர்கள் கிறிஸ்தவ வாழ்வினை மையப்படுத்தி திண்டிவனத்தில் இயங்கும் 5 பணிக்குழுக்களும் இணைந்து இறைநம்பிக்கை உருவாக்கப் பயிற்சியினை வழங்க தயாராக உள்ளதாகக் கூறினார். 100 இளைஞர் திட்டத்தில் 9ஆவது பயிற்சியாக இணைப்பது குறித்து திட்டமிட அழைப்பு விடுத்தார்.

விவிலியப் பணிக்குழு:

டிசம்பர் திங்களின் தோழன் இதழ் மூலம் இளைஞர் மையப்படுத்திய சிந்தனைகளை ஏற்கனவே பரவலாக்கத் தொடங்கியுள்ளோம். இளைஞர் ஆற்றுப்படுத்துதல் – விவிலிய அணுகுமுறைகள் என்ற பயிற்சியானது சன. 12 முதல் 14 முடிய திண்டிவனத்தில் இளைஞர்களுக்காக நடைபெற உள்ளது. ‘சமூகப்

பகுப்பாய்வும் விவிலிய பகுப்பாய்வும்' என்ற கருப்பொருளில் இளைஞர் பணிக்குழுவோடு இணைந்து 100 இளைஞர்களுக்குப் பயிற்சி வழங்க உள்ளோம். பங்குகளில் உள்ள இளைஞர்களையும் விவிலியம் வாசிக்க வைக்க குறைந்த விலையில் விவிலியத்தை அடுத்த ஆண்டு வழங்க உள்ளோம். விவிலிய அறிஞர்களைக் கொண்டு இளைஞர் விவிலியத்தை உருவாக்க உள்ளோம் என செயலர், அருள்பணி. உபால்டு அவர்கள் பகிரந்து கொண்டார். விவிலிய ஆளுமைகள் குறித்த தொகுப்பு நூலை மே திங்களுக்குள்ளாகக் கொணர உள்ளதையும் தெரிவித்தார்.

மாதா தொலைக்காட்சி

இளைஞர் செபமாலை செபித்தல், நற்கருணை ஆராதனையில் பங்கு கொள்ளுதல் முதலியவற்றை ஒளிப்பதிவு செய்து மாதா தொலைக்காட்சியில் ஒளிபரப்ப உள்ளோம். 'கிறிஸ்து வாழ்கிறார்' சிந்தனைகளைத் தொடர்களாக ஒளிபரப்பி அனைத்து தரப்பினருக்கும் இளைஞர் பற்றிய நலமான பார்வையினை வழங்க இளைஞர் பணிக்குழுவோடு இணைந்து செயல்பட உள்ளோம். விவிலியப் பணிக்குழ இளைஞர் மையப்படுத்தி செயல்படுத்துபவனற்றை மாதா தொலைக்காட்சியில் ஒளிபரப்பத் தயாராக உள்ளோம் என மாதா தொலைக்காட்சியின் நிர்வாக இயக்குனர், அருள்பணி. டேவிட் ஆரோக்கியம் பகிர்ந்து கொண்டார்.

நம்வாழ்வு

இளைஞர் ஆண்டினை முன்னிட்டு இளம் எழுத்தாளர்களை உருவாக்கும் பயிற்சியானது மண்டலங்களில் மேற்கொள்ள உள்ளோம். நம்வாழ்வு இதழில் 3 எழுத்தாளர்களைக் கொண்டு இளைஞர்களுக்கு வழிகாட்டுதலை வழங்க உள்ளோம். இளைஞர் தொடர்பாகப் பணிக்குழுக்கள் மேற்கொள்ளும் செயல்பாடுகளை நம்வாழ்வு இதழில் வெளியிட உள்ளோம். ரூ. 50,000 மதிப்பில் தமிழக அளவில் கட்டுரை போட்டியினை நடத்த உள்ளோம். இளைஞர் ஆண்டினை முன்னிட்டு இளைஞர்கள் நம்வாழ்வு இதழை வாசிக்க, சந்தாரார்களாக ஆகும் பொருட்டு ஆண்டு சந்தா தொகையில் ரூ. 100 குறைக்கத் திட்டமிட்டுள்ளோம் என நம்வாழ்வு இதழ் சார்பாக முதன்மை ஆசிரியர் அருள்பணி. ஞானி பகிர்ந்து கொண்டார்.

அன்பியப் பணிக்குழு

இளைஞர் ஆண்டினை முன்னிட்டு ஒவ்வொரு அன்பியத்திலும் இளைஞர் பொறுப்பாளர்கள் கட்டாயம் இருக்க வேண்டும் என்ற நடைமுறையை வரும் ஆண்டில் கட்டாயப்படுத்த உள்ளோம். இளைஞர் பொறுப்பாளர் இளைஞராக இருப்பது சிறப்பு என்பதனை கவனத்தில் கொள்வோம். அவர்கள் மேற்கொள்ள வேண்டிய

பணிகளை இறையாட்சியின் கருவியாய் அன்பியம் என்ற சிறுநூலில் வரையறை செய்துள்ளோம். மண்டல அளவில் இளைஞர்களை ஒருங்கிணைத்து சிறப்பு கவனம் செலுத்த உள்ளோம். அதோடுகூட அன்பியங்களில் உள்ளவர்களுக்கு இளைஞர் பணிக்குழுவானது பயிற்சிகளுக்கான கருத்தாளர்களை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினையும் செயலர், அருள்பணி. ஜஸ்டஸ் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

அருள்பணியாளர்கள், துறவிகள் ஆகியோருக்கு ஒவ்வொரு திங்களும் நடைபெறும் தியானங்கள், ஆண்டுத் தியானங்கள் ஆகியனவற்றில் இளைஞர்கள் மையப்படுத்திய சிந்தனை இருப்பது சிறப்பு என்ற பரிந்துரையினையும் முன்வைத்தார். திங்கள் தோறும் நடைபெறும் தியானங்களில் இளைஞர் பற்றிய சிந்தனைகளை இடம் பெறச் செய்யலாம் என பேராயர் அவர்கள் பரிந்துரையினை ஏற்றுக் கொண்டார்கள்.

மறைக்கல்வி பணிக்குழு

இளைஞர் ஆண்டினை முன்னிட்டு, இளைஞர் பணிக்குழுவோடு இணைந்து இளைஞர் மறைக்கல்வி உருவாக்க உள்ளோம் என செயலர், அருள்பணி. ஜார்ஜ் சின்னப்பன் அவர்கள் பகிரந்து கொண்டார்.

சமூகப் பணி மையம்

சமூகப் பணி மையங்களில் உள்ள பணியிடங்களில் பணியாற்ற இளைஞர்களுக்கு முன்னுரிமை அளித்து வேலைவாய்ப்பினை வழங்கத் திட்டமிட்டுள்ளோம் என்பதை துணைச் செயலர், அருள்பணி. ஆரோக்கியசாமி தெரிவித்தார். அரசின் நிர்வாகத் துறையில் கத்தோலிக்க இளைஞர்கள் அதிகமாகப் பங்கேற்க சிறப்பு பயிற்சி மையம் ஒன்றினை தமிழக அளவில் உருவாக்கலாம். அதே வேளையில் ஏற்கனவே உள்ள சிறப்பு மையங்களில் நமது இளைஞர்கள் பயில தேவையான நிதிஉதவியை ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற பரிந்துயினை ஆயர் நசரேன் அவர்கள் முன்வைக்க, துணைச் செயலர், அருள்பணி. ஆரோக்கியசாமி அதனைச் செயல்படுத்த முயற்சிப்பதாக உறுதியளித்தார்.

இறையழைத்தல் பணிக்குழு

பிப. 22, 23 ஆகிய நாட்களில் இளைஞர்களை அணுகும் முறை குறித்த தெளிவினைப் பெற இறையழைத்தல் ஊக்குனர்களுக்கான கருத்தரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்ய உள்ளதாகச் செயலர், அருள்பணி. அலெக்சாண்டர் பகிர்ந்து கொண்டார். நந்தவனநாதத்தில் பிடச் சிறார்களுக்கான பகுதியினை தொடங்க உள்ளதனையும் தெரிவித்தார்.

உரையாடல் பணிக்குழு

பல சமயங்கள் குறித்த விழிப்புணர்வினை இளைஞர்களுக்கு வழங்குவதற்கான வழிமுறைகளை ஆவனச் செய்ய உள்ளதாகவும் பிற சபை இளைஞர்களை அணுகவும் அவர்களோடு இணைந்து செயல்படுவதற்கான வழிமுறைகளைத் திட்டமிட உள்ளதாகவும் செயலர், ஆரோக்கிய சவரியப்பன் தெரிவித்தார்.

திருவழிபாடு

இளைஞர்கள் அருளடையாளங்களில் பொருள்ள முறையில் பங்கேற்க வழிகாட்ட உள்ளோம். இளைஞர்கள் திருஇசையினை பயன்படுத்துவது குறித்த கருத்தரங்கம் ஒன்றினை ஏற்பாடு செய்ய உள்ளோம் என செயலர், அருள்பணி. அற்புதராஜ் அவர்கள் பகிர்ந்து கொண்டார்.

இளைஞர்களுக்கான தனித் திருப்பலிக்குத் தமிழக ஆயர் பேரவை அனுமதி அளித்துள்ள வேளையில், படைப்பாற்றலோடு திருப்பலியினைக் கொண்டாட வழிமுறைகளை உருவாக்க ஆர்வமுள்ள அருள்பணியாளர்களை மறைவட்ட அளவில் கண்டறிய வேண்டும் என பேராயர் அந்தோனி பாப்புசாமி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

குடும்ப, நலவாழ்வுப் பணிக்குழு

போதை ஒழிப்புப் பயிற்சிகளை வழங்குவதற்கான கருத்தாளர் குழுவினை வழங்க தயாராக உள்ளோம். திருநங்கை போன்ற சிறப்பு நிலையினருக்குச் சிறப்பு கவனம் அளிக்க திட்டமிட்டுள்ளதனை செயலர், அருள்சகோ. கிளமென்சியா பகிர்ந்து கொண்டார்.

பெண்கள் பணிக்குழு

இளம்பெண்களுக்கான தொழில் வாய்ப்பு பயிற்சிகளை வழங்கத் தயாராக உள்ளதாகச் செயலர், திருமதி. ஆஞ்சலா அவர்கள் தெரிவித்தார்.

தொழிலாளர் பணிக்குழு

கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம் வழியாகப் பயிற்சிகள் வழங்க உள்ளோம். இளம் கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கத்தில் நிலவும் குழப்பங்களைச் சரிசெய்து, புத்துருவாக்கம் செய்ய உள்ளோம். அரசின் திட்டங்களை இளைஞர்கள் தெரிந்து கொள்ளவும் கடன் உதவிகளைப் பெற்றுக் கொள்ளவும் வழிமுறைகளை

மாவட்ட திறன் வளர்ப்பு மையத்துடன் இணைந்து செயல்படுத்த உள்ளோம் என செயலர், அருள்பணி. ஜெயக்குமார் தெரிவித்தார்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பணிக்குழு

தொழிலாளர் பணிக்குழுவோடு இணைந்து தொழில் தொடங்குவதற்கு அரசின் கடனுதவிகளைப் பெற உதவு செய்வதாகச் செயலர், அருள்பணி. ஜான்சன் தெரிவித்தார்.

பட்டியலினத்தார் பணிக்குழு

தலித் கொள்கை வரைவினை அனைத்து இளைஞர்களும் அறிந்து கொள்ள ஒருநாள் கருததரங்கினை ஏற்பாடு செய்ய உள்ளோம். தலித் விடுதலை ஞாயிறை இளைஞர் பணிக்குழுவோடு இணைந்து கொணடாட உள்ளோம். ஒவ்வொரு மறைமாவட்டத்திலிருந்தும் 25 இளைஞர்களுக்குச் சிறப்பு பயிற்சி அளித்து, இளைஞர் இயக்கத்தோடு இணைந்து செயல்பட வழிகாட்டுவோம். ‘இன்னா செய்யாமை’ என்ற பெயரில் தலித் இளைஞர்கள் திருஅவையினை எதிர்மறை மனநிலையோடு அணுகாமல் நேர்நிலை மனநிலையோடு அணுக சிறப்புப் பயிற்சியினை வழங்க உள்ளோம் என செயலர் அருள்பணி. குழந்தைநாதன் பகிர்ந்து கொண்டார்.

பொதுநிலையினர் பணிக்குழு

பணிக்குழுவிற்கான திட்டமிடலை ஏற்கனவே நிறைவேற்றியுள்ளதால், பணிக்குழுவில் முன்னெடுக்கப்படும் பயிற்சிகளில் இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்க உள்ளோம். தலைமைத்துவத்தினை சமூகம், திருஅவை, அரசியல் ஆகிய தளங்களில் இளைஞர்கள் வளர்த்தெடுக்க இப்பயிற்சிகள் உதவும். பங்கு அருள்பணிப் பேரவை, நிதிக்குழு போன்ற பங்கேற்பு அமைப்புகளில் இளைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்க உதவி செய்வோம் என செயலர், அருள்பணி. லூர்துசாமி பகிரந்து கொண்டார். உள்ளாட்சி தேர்தல் அண்மையில் வர உள்ள நிலையில் இளைஞர்களுக்குச் சிறப்பு பயிற்சி அளித்து, தேர்தல்களில் போட்டியிட ஊக்கப்படுத்த வேண்டும். உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிட இளம்பெண்களுக்குச் சிறப்பு வாயப்புகள் வழங்கப்பட உள்ளதால் அவர்களுக்குச் சிறப்புக் கவனம் வழங்கப்ட வேண்டும் என்ற செய்தியினையும் கூடுதல் செய்தியாகப் பகிர்ந்து கொண்டார்.

ஆயர் பேரவையின் தலைவர், பேராயர் அந்தோனி பாப்புசாமி அவர்கள் நிறைவுரையினை வழங்கினார். 6 திங்கள்களுக்கு ஒருமுறை பணிக்குழுக்களின் செயலர்கள் கூட்டமானது நடைபெறும். அனைத்து

பணிக்குழுக்களின் பொதுக்குழுக்களிலும் துணைச் செயலரைப் பங்கேற்க அழைக்க வேண்டும். ஒவ்வோராண்டும் மே 31ஆம் நாளுக்குள்ளாக அறிக்கையினை ஆங்கிலத்தில் எழுதி, துணைச் செயலருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இறுதியாக அருள்பணி. மார்ட்டின் நன்றி கூற, அருள்பணி. அற்புதராஜ் மூவேளை மன்றாட்டினை வழிநடத்தினார். பகல் உணவுடன் கூட்டமானது இனிதே நிறைவுற்றது. கூட்டத்திற்கான ஏற்பாடுகளை பொதுநிலையினர் பணிக்குழுவின் செயலர், அருள்பணி. லூர்துசாமி அவர்கள் சிறப்பாகச் செய்திருந்தார்.